


தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் கழக முதன்மைச் செய லாளரும், நகர்ப்புற நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத் தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தமிழ் நாட்டிற்கான டெல்லி சிறப்பு பிரதி நிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தி.பழநி வேல், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், ச.முரசொலி எம்.பி, எம்.எல்.ஏக்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி. கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை,என்.அசோ க்குமார், மாநகர செயலாளர்கள் சு.ப.தமிழழ கன், சண்.இராமநாதன், உள்ளிட்ட தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள், மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செய லாளர்கள், மாவட்ட சார்பு அணி களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் இந்தளூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை பிற்படுத்தப்பட்டோர் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., ஆகியோர் வழங்கினார்கள். உடன் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் ஞான. இமயநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், அரசு வழக்கறிஞர் இராமசேயோன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் பலர் உள்ளனர்.

நார்வே செஸ் - 2025 தொடரில் 3-ஆம் இடம்!

# இந்திய செஸ் எதிர்காலத்தின் அடையாளம் குகேஷ்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, ஜூன் 8 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

***நார்வே செஸ் 2025 தொடரில் நமது குகேஷ் அவர்கள் 14.5 புள்ளிகளுடன் அபாரமாக விளையாடி மூன்றாம் இடம் பெற்றிருப்பதில் பெருமை கொள்கிறேன். மிகச் சிறந்த திறமையும் உறுதியும் ஒருங்கே பெற்றுள்ள குகேஷ் அவர்கள் இந்திய செஸ் எதிர்காலத்தின் அடையாளமாகத் தொடர்ந்து மிளிர்கிறார்.***

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, பரவாக்கோட்டை ஊராட்சி பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளுக்கு தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா சீருடை மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார். ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில்

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ சிறப்பு முகாம்!

## கள்ளக்குறிச்சி மற்றும் சின்னசேலம் வட்டங்களில் ஜூன் 10,11 தேதிகளில் நடைபெறுகிறது

*கள்ளக்குறிச்சி,ஜூன் 9-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் முதல் பொதுமக்களின் ஏற்ற மிகு வாழ்விற்கு பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள், இதன் ஒரு பகுதியாக தமிழக அரசு பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் கலைந்து தீர்வு காணுவதற்கு முன்னுரிமை அளித்து செயலாற்றி வருகிறது.*

*அந்த வகையில் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்ற 30 நாட்களுக்குள் அரசின் முக்கிய சேவைகளை அவர்களின் இல்லத்திற்கு அருகே வழங்கும் நோக்கத்துடன் மக்களுடன் முதல்வர் திட்டம் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது, ஏற்கனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் 2 கட்டங்களாக நடத்தி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.*

*இதன் தொடர்ச்சியாக தற்பொழுது மக்களுடன் முதல்வர் திட்டம் மூன்றாம் கட்டமாக விளிம்பு நிலையிலுள்ள மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முகாம்களை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது, அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் கடந்த 28.05.2025 அன்று உளுந்தூர்பேட்டை வட்டத்தில் தொடங்கி நடைபெற்றது.*

*இதன் தொடர்ச்சியாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.தலைமையில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட முகாம் நாளை 10.06.2025 மற்றும் 11.06.2025 ஆகிய நாட்களில் கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதியிலும், 13.06.2025 மற்றும் 14.06.2025 ஆகிய நாட்களில் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியிலும், 24.06.2025 மற்றும் 25.06.2025 ஆகிய நாட்களில் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியிலும் நடைபெறவுள்ளது.*

*அந்த வகையில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் நாளை 10.06.2025 செவ்வாய்க்கிழமை அன்று கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி வட்டம், நீலமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பும், தென்கீரனூர் கிராம நிர்வாக அலுவலகம் முன்பும், சிறுவங்கூர் சிவன் கோவிலின் அருகிலும், பெருவங்கூர் மகா மாரியம்மன் கோவில் முன்பும், முடியனூர் சிவன் கோவில் முன்பும் நடைபெறவுள்ளது.*

*தொடர்ந்து 11.06.2025 புதன்கிழமை அன்று தியாக துருகம் ஒன்றியத்தில் கூத்தக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும், வடதொரசலூர் அய்யனார் கோவில் அருகிலும், குடியநல்லூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி வளாகத்திலும், சின்னசேலம் வட்டத்தில் தென்சிறுவளூர் அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி வளாகத்திலும், நயினார்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.*

*இம்முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள். இம்முகாமில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளார்கள்.*

*எனவே பொதுமக்கள் தங்களது பகுதிகளில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கி தீர்வு கண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.*



உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முகவனூர் (வடக்கு) ஊராட்சி, பாம்பாலம்மன் கோவில் திடல், பாம்பாட்டிபட்டி பகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றி, கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ஜோதிமணி, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல்சமது அவர்கள், அரசு துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி புதுக்கோட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வாராப்பூர் ஊராட்சிப் பகுதியில் இயங்கி வரும் வாராப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகள் வருகை பதிவு மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் வருகை பதிவேட்டினை பார்வையிட்டு, போதிய மருந்துகள் கையிருப்பில் உள்ளதா, நோயாளிகளுக்கு உரிய வகையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறதா என்பது குறித்து புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சதிஷ் உள்ளிட்ட, கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதியேற்போம்!

# ஓரணியில் நின்று ‘வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, ஜூன் 8- திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**




கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்த லின் பேரில் அரியலூர் மாவட்ட புதிய இளைஞரணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்! தமிழ்நாடு அரசு போக்கு வரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பி னர் க.சொ.க.கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கிளைக் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கழகத்தின் வலிமையை மென்மேலும் கூட்டிட “ஓரணியில் தமிழ்நாடு” என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்தை உடன்பிறப்புகள் வீடு, வீடாகச் சென்று மேற்கொள்ள வேண்டும் என மதுரை பொதுக் குழுவில் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அதனைச் சிறந்த முறையில் செயல்படுத்த கழகத் தலைவர் தலைமையில் இன்று நடைபெற்ற, மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில்பங்கேற்றோம்.

கழக இளைஞர் அணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை எடுத்துக்கூறி, ”ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கைக்கும் இளைஞர் அணி தனது முழு ஒத்துழைப்பை வழங்கிடும் எனவும் உரையாற்றினோம்.

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைத் தொடர, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 விழுக்காடுகளுக்கும் அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதியேற்போம்!



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில்நகர கழக செயலாளர் ம. சுப்பராயன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 18 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மரக்கன்றுகளை சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் வழங்கினார் உடன் சீர்காழி நகர கழக செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் ம.சுபராயன்,சீர்காழி மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர்மற்றும் நகரக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.